நாள்: 23.06.2025

O.S. No. 48/2022

வா.சா.1

பெயர்: ஆனந்தகிருஷ்ணன், த/பெ. ஜெயராமன்

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :</u>**

1. நான் வழக்குரையில் கூறியுள்ள சந்து பகுதி தெற்கு வடக்காக அமைந்துள்ளது என்றால் சரிதான். தெற்கு வடக்காக அமைந்துள்ள சந்து பகுதில் மேல்புறம் முதல் வீட்டில் ரஹ்மத்நிஷா மற்றும் 6 நபர்கள் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். 2 வது வீட்டில் ராணி - நல்லசிவம், 3 வது வீட்டில் விஜயகுமார்-ராஜம், 4 வது வீட்டில் மீனாட்சி, 5 வது வீட்டில் நானும், வசித்து வருகிறோம் என்றால் சரிதான். அதுபோல் மேற்படி சந்து பகுதியின் கீழ்புறத்தில் 1 வீட்டில் செந்தில் என்பவரும், 2 வது வீட்டில் இந்திரா என்பவரும் 3 வது வீட்டில் உசேன்பாய் என்பவரும் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான்.

2. நான் வழக்குரையுடன் தாக்கல் செய்துள்ள வரைபடத்தில் மேல்புறம் குடியிருந்து வருபவர்கள் விவரத்தை கூறியுள்ளேன் என்றாலும், கீழ்புறம் குடியிருந்து வருபவர்கள் விவரம் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி விவரம் தெரியாதப்படுத்தாக காரணத்தில் நான் வழக்குரையில் தாக்கல் செய்துள்ள வரைபடம் சரியானதல்ல என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் தாவா சொத்திற்கான வா.சா.ஆ.1 நகர அளவை பதிவேட்டு ஆவணத்தில் மொத்த விஸ்தீரணம் 723 சதுர மீட்டர் கணக்கில் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1 சதுர மீட்டர் என்பது 10.7.64 சதுரடி என்ற விவரம் தெரியும் என்றால் சரிதான். அவ்வாறு கணக்கீடு செய்யும்போது வா.சா.ஆ.1 ஆவணப்படி தாவா சொத்திற்கு மொத்த விஸ்தீரணம் 7782 சதுரடி என்றால் சரிதான்.

3. நான் வழக்குரையில் மேற்படி வா.சா.ஆ.1க்கு முரணாக தாவா சொத்தின் விஸ்தீரணம் 8826 சதுரடி என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் அளவீடு செய்து பார்த்தபோது மேற்படி விஸ்தீரணம் இருந்தது. நான் அளவீடு செய்தது தொடர்பாக நீதிமன்றத்தில் ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் இல்லை. வா.சா.ஆ.1 ஆவணப்படி என் தாயாருக்கு 7782 சதுரடி மட்டும் பாத்தியதை உள்ளது என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.1கண்டுள்ள சொத்தில்

ஏதேனும் விற்பனை செய்யப்பட்டுள்ளதா என்றால் என் தாயார் எனது சகோதரி மீனாட்சி என்பவருக்கு 2100 சதுரடி விஸ்தீரணம் உள்ள சொத்தை செட்டில்மெண்ட் மூலமாக கடந்த 2016-ல் கொடுத்துள்ளார். மேற்படி செட்டில்மெண்ட் போக மீதமுள்ள சொத்து என்பது 5682 சதுரடி தான் என்றால் சரிதான். மேற்படி 5682 சதுடி சொத்தை பொறுத்து மேற்கொண்டு வில்லங்கம் எதுவும் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. மேற்படி செட்டில்மெண்டிற்கு பிறகு ஏற்பட்ட TSLR பதிவுகளை நான் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஆனால் நான் வழக்கில் செட்டில்மெண்ட் சொத்தினை சேர்த்து விஸ்தீரணம் கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

4. என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.4 ஆவணங்கள் என் வீட்டிற்குரியவை என்றாலும், வழக்கு சொத்திற்கு உரியவை அல்ல என்றாலும் சரிதான். என் தாயார் கனகாபுஜம் என் சகோதரியான மீனாட்சிக்கு எழுதிக்கொடுத்த வா.சா.ஆ.5 ஆவணத்தில் நகர புல எண்.1247/4-ல் கீழ்புறமாக 1100 சதுரடியில் பொதுப்பதையில் பொதுவில் புழங்கிக்கொள்ளும் பாத்தியதை கொடுக்கப் பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பொதுப்பாதை என்பது என் வீட்டுடன் இணைந்த பகுதி என்றால் சரிதான். நான் வழக்கு ஆவணங்களில் தாக்கல் செய்துள்ள சொத்து விவரமும், வழக்குரையில் கூறியுள்ள சொத்து விவரமும் முன்னுக்கு பின் முரணாக உள்ளது என்றால் சரியல்ல.

5. நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வரும் பொதுப்பதையை இந்த பிரதிவாதி பயன்படுத்த கூடாது என தடை செய்ய எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றாலும், வழக்கு சட்டப்படி வினையப்படவில்லை என்றாலும், தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல.

//மேற்படியார் தரப்பில் இன்றைய விசாரணையின்போது ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

MOHAMED BASIL S

Digitally signed by MOHAMED BASIL S
Date: 2025.06.23 17:34:26 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

திருவாரூர்.